# திருத்தங்கல் நகராட்சி
# சாதாரண கூட்டம்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 ஹேவிளம்பி வருடம் பங்குனி திங்கள் 14 நாள் **28–03–2018** ம் தேதி புதன்கிழமை மாலை **4.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 23–03–2018

**தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**

## பொருள் எண்.35

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் எண் TN67 P5158 02/08/2005-ல் மகேந்திரா & மகேந்திரா கம்பெனியில் வாங்கப்பட்டு 28/02/2017-ம் தேதி வரை மொத்தம் 4,63,454 கிலோ மீட்டர் தூரம் ஓடியுள்ளது. தற்போது இந்த வாகனத்தில் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் இந்த ஈப்பு வாகனத்திற்கு மாற்றாக அலுவலக உபயோகத்திற்கு புதிய டீசல் ஈப்பு வாகனம் ஒன்று ரூ.8.00/- இலட்சம் ( ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மதிப்பில் வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி வேண்டி மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) 2018-19 வருட வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 760/இ1/2018

## பொருள் எண்.36

இந்நகராட்சி வாகனம் TN67 P5158 2.08.2015ம் வருடம் வாங்கப்பட்டு 2,20, 000/– கி. மீ -க்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தில் கியர்பாக்ஸ் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவேண்டி இயக்க முடியாத நிலையில் உள்ளதை பழுது பணி மேற்கொள்ள **10.03.2017**ம்தேதி பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | கே. ஆறுமுகம் ஆட்டோ ஒர்க்ஸ் 3/129 2டி, சாத்தூர் ரோடு சிவகாசி | 38,530/– |
| 2 | ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ் தென்காசி–செங்கோட்டை ரோடு செங்கோட்டை | 43,850/– |

அலுவவக குறிப்பு–

1. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே. ஆறுமுகம் ஆட்டோ ஒர்க்ஸ் சிவகாசி மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. அரசு பணியாக இருப்பதால் வாகன இயக்கத்தின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 760 /இ1/2018

## பொருள் எண்.37

திருத்தங்கல் நகராட்சி அலுவலகத்தில் சூரிய மின்சக்தியின் மூலம் மின்சாரம் கிடைக்கப்பெற்று அவை 2.5Kw திறன் கொண்ட on Grid , 5Kw திறன் கொண்ட off Grid Battery கள் மூலம் சேமிக்கப்பட்டு அலுவலகத்தில் மின்தடை ஏற்படும் நேரங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்சமயம் மின்சாரத்தினை சேமித்து வைக்கப்படுகின்ற பேட்டரிகள் 8 எண்ணம் பழுதாகி உள்ளது. இதனால் மின்தடை ஏற்படும் நேரங்களில் கணினிகளை பயன்படுத்துதல் மற்றும் இவ்வலுவலக கணினி வரிவசூல் மையங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றது. எனவே மேற்படி பழுதான பேட்டரிகளுக்கு பதிலாக புதிய பேட்டரிகளை பொருத்தி மின்தடை ஏற்படும் நேரங்களில் அலுவலகப் பணிகளை தடையின்றி மேற்கொள்ளவும் கணினி வரிவசூல் மையங்களில் ஏற்படும் இடையூறுகளை சரி செய்யவும் மேற்படி புதிய பேட்டரிகளை வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகையாக ரூ.2,00,000 (இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:687/இ1/2018

## பொருள் எண்.38

திருத்தங்கல் நகராட்சியில் காலியாக உள்ள ஜி.எல்.ஆர். ஆப்ரேட்டர், பணியிடத்தினை பூர்த்தி செய்வது தொடர்பான வேலைவாய்ப்பு அறிவிக்கையை கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்தவகையில் தேற்கான பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பத்திரிக்கையின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மாலை தமிழகம் | ரூ. 17284/– |
| 2 | மக்கள் குரல் | ரூ. 22109/– |

**அலுவலகக் குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதிப்பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

ந.க.எண்: 351 /சி1/2010

## பொருள் எண்.39

திருத்தங்கல் நகராட்சி – சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2016–17(MLA FUND) ன் கீழ் வார்டு எண். 03ல் மருத்துவ தெருவில் சமுதாயக் கூடம் அமைக்கும் பணி, எஸ்.என்.புரம் ரோட்டில் சமுதாயக் கூடம் கட்டும் பணி மற்றும் உறிஞ்சி குளம் சோனி கல்குவாரியிலிருந்து பைப் லையன் பதித்து தண்ணீர் சப்ளை செய்யும் பணி ஆகிய பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 24.10.2017 அன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளியில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மேற்கண்ட பணிகளுக்குரிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு Ad Vistaa என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. (Bill No.057/advin17, நாள். 28.09.2017) மேற்படி பட்டியல் தொகை ரூ. 83160/– மட்டும் Ad Vistaa நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.774/இ1/2014

## பொருள் எண்.40

இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 2018–2019 மற்றும் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் நடைபெறும் கோவில் திரு விழாக்கள், பண்டிகை நாட்கள், அரசு விழாக்கள், மாண்புமிகு அமைச்சல் பெருமக்கள் பங்கு பெறும் விழாக்கள் , கழிப்பறைகள், தண்ணீர் தொட்டி சுத்தம் செய்யும் பணிகள், குப்பை போடும் இடங்கள், பொது மக்கள் கூடும் சுகாதாரமற்ற இடங்கள் மற்றும் பல பணிகளுக்கு தேவையான சுண்ணாம்பு துாள், பிளீச்சிங் பவுடர் ( கிரேடு–I) பிளீச்சிங் பவுடர் ( கிரேடு–II) பினாயில் ஆசிட், பிளீச்சிங் ஆயில் போன்ற கிருமி நாசினி போன்ற பொருட்களை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 9,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்திற்கொண்டு உத்தேச செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.64/2018/எச்1)

## பொருள் எண்.41

திருத்தங்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 L3265 TN67 L3267 இரண்டு மினி லாரிகளுக்கு முன் பக்க டயர்களின் பட்டன் தெய்த்து விட்டதால் அடிக்கடி பஞ்சர் ஆகி வருகிறது. எனவே மேற்படி இரண்டு மினி லாரிகளுக்கு முன்பக்க டயர்கள் இரண்டு எண்ணம் வீதம் 4 எண்ணம் டயர்கள் புதியது வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 35, 000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.699/2018/எச்1)

## பொருள் எண்.42

திருத்தங்கல் நகராட்சி எல்லைகுட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள கழிப்பறைகளில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக அறிவிக்க கழிப்பறை சுவர்களில்ஆண் பெண் இருபாலருக்குரிய கழிப்பறையில் நகராட்சியின் பெயர், சுத்தம் செய்பவர் பெயர், மேற்பார்வையாளர் பெயர் கழிப்பறை எண் ஆகியவற்றை விளம்பரம் செய்ய வேண்டும் மேற்படி சுவர் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

(802/2018/எச்1)

## பொருள் எண்.43

திருத்தங்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67 T1593 டிராக்டர் 08/10/2000ல் வாங்கபட்டு 18 வருடங்கள் முடிந்து விட்டன. தற்சமயம் வாகனத்தின் இயக்கு திறன் குறைந்து விட்டதால் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு இஞ்ஜின் வேலை பார்க்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.770/2018/எச்1)

## பொருள் எண்.44

திருத்தங்கல் நகராட்சிப் பகுதியில் குடிநீர் திட்டம் மற்றும் கழிப்பிடங்களில் உள்ள போர்வெல்களில் பொருத்தப்பட்டுள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் கீழ்கண்ட விவரப்படி பழுதாகி பயன்பாடற்ற நிலையில் உள்ளது, மேற்படி மோட்டார்களை பொது ஏலத்தின் மூலமாக அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பழுதாகி உள்ள மோட்டார்களின் விவரம்**

| வ.எண் | மோட்டார்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | Openwell நீர் மூழ்கி மோட்டார் | 1 எண்ணம் |
| 2 | V.4 Type நீர் மூழ்கி போர்வெல் மோட்டார் பம்ப் | 27 எண்ணம் |
| 3 | V.6 Type நீர் மூழ்கி போர்வெல் மோட்டார் பம்ப் | 12 எண்ணம் |
| 4 | ½ HP மினரல் வாட்டார் ரூம்பில் உள்ள மோனோ பிளாக் மோட்டார் | 1 எண்ணம் |
| | மொத்தம் | 41 எண்ணம் |

**பழுதாகி உள்ள பேனல் போர்டுகள் விவரம்**

| வ.எண் | பேனல்போர்டுகள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 3 பேஸ் பழுதான பேனல் போர்டு | 49 எண்ணம் |
| 2 | சிங்கிள் பேஸ் பழுதான பேனல் போர்டு | 23 எண்ணம் |
| | மொத்தம் | 72 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 772/இ1/2018

## பொருள் எண்.45

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 05 மற்றும் திருவள்ளுவர் காலனியில் உள்ள பொது சுகாதார வளாகம் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது. அப்பகுதி மக்களின் பொது சுகாதார அவசியம் கருதி மேற்படி பழுதடைந்த சுகாதார வளாகத்தினை பராமரிப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/திற்கு ( ரூபாய் முன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:296/இ1/2018

## பொருள் எண்.46

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் பங்குனி பொங்கல் விழாவினை தொடர்ந்து தேர்த் திருவிழா நடைபெற இருப்பதால் இந்நகர் பகுதியில் உள்ள ரத வீதிகளான மேலரத வீதி மற்றும் வடக்கு ரத வீதிகளில் உள்ள சேதமடைந்த சாலைப் பகுதிகளில் Advance Patch work மூலம் சரி செய்து மேற்படி ரத வீதிகளை சீர் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1,00,000/-( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:874/இ1/2018

## பொருள் எண்.47

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கடித எண்.15940/2017/WB நாள்.12.2017-ன் படி நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோர்க்கு Airtel CUG ( நகராட்சி நிர்வாக ஆணையரக கூட்டு குழு இணைப்பு ) மாத வாடகை கட்டணமாக ரூ.499/-(ரூபாய் நானூற்று தொன்னூற்று ஒன்பது மட்டும்) கீழ்கண்ட இணைப்புகள் நகராட்சி பணிக்கு பயன்படுத்தவும் நகராட்சி ஆணையாளர் தொலைபேசி எண். 73973-89914 நகராட்சி பொறியாளர் தொலைபேசி எண். 73973-89915 மேற்படி இணைப்புக்கான மாத கட்டணத்தை நகராட்சி நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:663/இ1/2018

## பொருள் எண்.48

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனால் அலுவலகப் பணிகள் பாதிப்படைகின்றது. எனவே மின்சப்ளை தொடர்ச்சியாக பெற 40KVA , 3 Phase 415 Volte ஜெனரேட்டர் வாங்கி பேஸ்மென்ட் அமைத்து கேபிள்களை பொருத்தி மின் சப்ளை பெற ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,90,000/- -(ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொன்னூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 772/இ1/2018

## பொருள் எண்.49

திருத்தங்கல் நகராட்சியில் மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறப்பட்டு அவை இந்நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. தற்பொழுது கோடைக்காலம் தொடங்க இருப்பதால் பொதுமக்களுக்கு குடிநீரினால் ஏற்படும் நோய்களை தடுக்கும் பொருட்டும் குடிநீரை சுத்தம் செய்து விநியோகம் செய்யும் பொருட்டும் குளோரினேசன் மாத்திரைகளை வாங்கி குடிநீரினை சுத்தம் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 767 /இ1/2018

## பொருள் எண். 50

திருத்தங்கல் நகராட்சியில் 213 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் மோட்டார்கள் மூலம் குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது, தற்சமயம் ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பலவும் பழுதடைந்து விட்ட காரணத்தினால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகிறது, தற்பொழுது கோடைகாலம் தொடங்கிவிட்ட படியால் பொது மக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி தேவையான புதிய மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் வாங்கி பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 818 /இ1/2018

## பொருள் எண்.51

திருத்தங்கல் நகராட்சியில் 213 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகள் மூலம் பல்வேறு அளவுகளிலான GI குழாய்களின் மூலம் பொதுமக்குளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் குடிநீர் குழாய்களில் ஏற்படக் கூடிய பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு தேவையான GI பைப்புகள் , GI Specials மற்றும் Valuve கள் போன்ற குடிநீர் உபரிச் சாமான்கள் வாங்கி குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 819 /இ1/2018

## பொருள் எண்.52

திருத்தங்கல் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம் மற்றும் வணிக வளாகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 780/இ1/2018

## பொருள் எண்.53

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள். 15.03.2018—ல் தெரிவித்துள்ளப்படி நகராட்சி பகுதியில் உள்ள அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் தவிர அரசு உதவி பெற்று சுய நிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் 01.10.2017 இரண்டாம் அரையாண்டு முதல் புதிய வரிவிதிப்பு செய்வது தொடர்பாக உள்ள அறிவிக்கையை செய்தி தாளில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.834/2018/அ1

## பொருள் எண்.54

திருத்தங்கல் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிப்பொறிகள் , குளிர்சாதன கருவிகள் மற்றும் இதர மின் சாதனங்களை இயக்குவதற்கு , 240 Voltage மின்சாரம் தேவை. தற்பொழுது இவ்வலுவலக மின் இணைப்பு எண்.PK 332 மின் இணைப்பின் 192 Voltage மின்சாரம் மட்டுமே இணைக்கப் பெறுகின்றது. இதனால் இவ்வலுவலகத்தில் உள்ள மின்சாதனங்களை இயக்குவதில் பெரும் இடையூறுகள் ஏற்படுகின்றது. மேலும் ஆண்டு வரி வசூல் நேரங்களில் கணினி வரி வசூல் மையங்களில் கூடுதலாக கணிப்பொறிகளை இயக்க இயலாத நிலையின் காரணமாக பொது மக்களுக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றது. எனவே மேற்படி Voltage பிரச்சனைகளை சரி செய்யும் பொருட்டு CVT Tramsformer, புதிய பேனல் போர்டு மற்றும் புதிதாக 19/16 காப்பர் கேபிள்களை பொருத்தி 214 முதல் 240 Voltage வரை சீரான அளவில் மின்சாரத்தினை பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.80/-' (ரூபாய் ஒன்பது லட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 832/இ1/2018

## பொருள் எண்.55

திருத்தங்கல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் திட்ட ஆழ்துளை கிணறுகளுக்குரிய மின் இணைப்புகள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேற்படி மின் இணைப்புகளுக்கு மின் கட்டணம் மினிமம் தொகை செலுத்தப்பட்டு வருவதால் மேற்படி மின் இணைப்புகளை நிரந்தரமாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | மின் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | 03 | ஆலமரத்துப்பட்டி ரோடு | M . 1436 |
| 2 | 04 | ரயில்வே ஸ்டேசன் அருகில் | C.1050 |
| 3 | 07 | சத்யா நகர் மெயின் ரோடு —— பிரம்மன் வீடு போகும் பாதை | G. 2386 |
| 4 | 08 | கருணாநிதி காலனி மேற்கு பக்கம் | G. 2427 |
| 5 | 03 | பேட்டைத் தெரு பழைய கழிப்பிடம் | C.882 |
| 6 | 03 | பெரியார் காலனி | M. 1367 |
| 7 | 09 | எம்.ஜி.ஆர். நகர் பாய் வீடு பக்கம் | 013-441 |
| 8 | 10 | செங்கமல நாச்சியார் புரம் ரோடு லட்சுமி மேட்ச் முன்னால் | IN-701 |
| 9 | 10 | செங்கமல நாச்சியார் புரம் ரோடு போலீஸ் ஸ்டேசன் பக்கம் உள்ள கிணறு முன்னால் | IN – 1125 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 10 | பழைய E.B. ஆபிஸ் பக்கம் | IN – 110 |
| 11 | 11 | பாண்டியன் நகர் 2-வது தெரு சர்ச் பக்கம் | PN. 725 |
| 12 | 13 | சாட்சியார்புரம் ரோடு அழகு ___ மாரியப்பன் வீடு பக்கம் | G.1886 |
| 13 | 15 | நாடார் பிள்ளையார் கோவில் தெரு மாலையம்மன் கல்யாண மண்டபம் பக்கம் | D.558 |
| 14 | 16 | ஜவுளிக்கடை வீதி | D.539 |
| 15 | 17 | மாதங் கோவில் தெரு | E.777 |
| 16 | 17 | அய்யப்ப நாடார் சந்து | C.1334 |
| 17 | 18 | சுக்கிரவார்பட்டி ரோட்டில் கடைசி | NC.916 |
| 18 | 18 | சுக்கிரவார்பட்டி ரோட்டில் கடைசி | NC.976 |
| 19 | 19 | வடக்கு ரத வீதி 10 ஆயிரம் லிட்டர் டேங்க் பக்கம் | PK.498 |
| 20 | 21 | விஸ்வகர்மா நகர் மெயின் ரோடு | N.429 |
| 21 | 10 | பாண்டியன் நகர் குருநாதன் Headmaster வீடு அருகில் | IN.1205 |
| 22 | 16 | காளியம்மன் கோவில் பக்கம் உள்ள சிங்கிள் பேஸ் | G.2107 |
| 23 | 13 | N.R. நாதன் காலனி சிங்கிள் பேஸ் | G.1812 |
| 24 | 10 | மானூார் டாங்க் பக்கம் | P.N.986 |
| 25 | 13 | சத்யா நகர் மெயின் ரோடு மினி பஸ் திரும்பும் இடம் | G1661 |
| 26 | 19 | போடி நாயக்கர் தெரு வக்கீல் வீடு அருகில் | WLS.442 |
| 27 | 8 | சத்யா நகர் கணேசன் வீடு பக்கம் | G.2638 |
| 28 | 20 | தாளோடை | N.467 |
| 29 | | பெரியகுளம் கண்மாய் | N.402 |
| 30 | | பெரியகுளம் கண்மாய் | N.401 |
| 31 | | செங்குளம் கரையில் | N.274 |
| 32 | | தாளோடை பம்பிங் நிலையத்தில் உள்ள சிங்கிள் பேஸ் | N.89 |
| 33 | | நகராட்சி அலுவலகத்தின் உள்புறம் உள்ள பழைய சத்துணவு கூடம் சிங்கிள் பேஸ் | PK.331 |

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி இணைப்பு பெற செலுத்திய டெபாசிட் கட்டணத்தை நகராட்சிக்கு திரும்ப பெற அல்லது மின்சார கட்டணத்தில் ஈடு செய்து கொள்ள மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 832/இ1/2018

## பொருள் எண்.56

திருத்தங்கல் நகராட்சிக்குட்பட்ட போர்வெல்கள், திறந்த வெளி கிணறுகள் மற்றும் கழிப்பிடங்களில் சப் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி சப் மோட்டார்களை இயக்க 3 Phase மின் சப்ளை இல்லதா காரணத்தினால் புதிய 3 Phase மின் சப்ளை பெற்று வயரிங் செய்து மீட்டர் பொருத்த உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/-˙ (ரூபாய் ஒரு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**3 Phase வயரிங் மேற்கொள்ள வேண்டிய இடங்கள்**

1. வ.எண்.03 - 52 வீட்டுக் காலனி திறந்த வெளி கிணறு பக்கம்
2. வ.எண்.02 - அண்ணாகாலனி கிழக்கு பக்கம் உள்ள ஆழ்துளை கிணறு
3. சிவகாசி - விருதுநகர் ரோடு கருப்பசாமி கோவில் பின்புறம் உள்ள கிணறு
4. ஆணைக்குட்டம் பம்பிங் நிலையில் வெளியே உள்ள திறந்த வெளி கிணறு பக்கம்
5. விளையாட்டு மைதானம் அருகில் உள்ள கழிப்பிடம்
6. வ.எண்.01 வைஸ் சேர்மன் வீடு பின்புறம் உள்ள போர்வெல்
7. தாளோடை பம்பிங் நிலையம் கிழக்கு பக்கம் உள்ள பம்ப் ரூம்
8. வ.எண்.01 அண்ணா காலனி முதலியார் கிணறு பக்கம்

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

ந.க.எண்: 819/இ1/2018

## பொருள் எண்.57

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்: 04 பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் இன்றி தூர்ந்துவிட்ட காரணத்தினால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்படி பகுதிகளில் புதிய போர்வெல் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:687/இ1/2018

## பொருள் எண்.58

இந்நகராட்சியில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர் திரு.கு.சுந்தரமகாலிங்கம் 31.05.2018 -ல் ஓய்வு பெறவுள்ளார். அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகையும் அதற்கான வட்டியும் மற்றும் நிர்வாக பங்குத் தொகையும் சேர்த்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:581/சி1/2018

## பொருள் எண்.59

திருத்தங்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி, துணை இயக்குனர் பொது சுகாதாரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை துணை இயக்குனர் பொது சுகாதாரப் பணிகள் சிவகாசி அவர்களின் அறிவுறுத்தலின் படியும் மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் ஆய்வு கூட்டத்தின் அறிக்கையின் படியும், தற்போது கோடை மழை பெய்து வருவதாலும் ஏப்ரல் முதல் வறட்சி காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்படி வாய்ப்புள்ளதால், பொது மக்கள் தண்ணீர் தேக்கி வைத்து கொசுப்புழு உருவாகும் வாய்புள்ள காரணத்தால் கொசுவினால் உருவாகும் டெங்கு சிக்கன் குனியா போன்ற கொசுவினால் பரவும் நோய்கள் பொது மக்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ள காரணத்தால் திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் கொசுப்புழு ஒழிப்பு பணியான அபேட் மருந்து ஊற்றுதல்,புகை மருந்து அடித்தல் மற்றும் தண்ணீர் தேங்க கூடிய தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை அமுத சுரபி என்ற மகளிர் சுய உதவி குழு மூலம் 55 தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் கொண்டு 01/04/2018 முதல் 31/03/2019 வரை ( ஏப்ரல்–2018முதல் மார்ச்–2019 வரை) மேற்கொள்ளவும், அவர்களுக்கான ஊதியத்தை மாவட்ட ஆட்சித்லைவர் விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை. Roc/A7/13699/2016 நாள். 29/07/2016//ல் கண்டுள்ள விலைநிர்ணய பட்டியலின் வ.எண்.34ல் கூறியுள்ளபடி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 185/– வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 35,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்திற்கொண்டு உத்தேச செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 802/2018/எச்1

## பொருள் எண்.60

இந்நகராட்சி 2017–18ம் ஆண்டிற்கான 2018–19–ம் ஆண்டிற்கான வரவு திட்டம் மற்றும் திருத்திய வரவு செலவுத் திட்டம் (Budget) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்: /சி1/2018

ஆணையாளர் / தனி அலுவலர்
திருத்தங்கல் நகராட்சி